பக்கங்கள் - 08
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 02 ஞாயிற்றுக்கிழமை (16.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 148

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005

இல.44, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## கொரோனாத் தொற்றாளர்களுக்கு இனி வீடுகளிலேயே சிகிச்சை

### இராஜாங்க அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே



(கொழும்பு)
பிசிஆர் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு எவ்வித நோய் அறிகுறியும் இல்லாத சந்தர்ப்பத்தில் அவரை வீட்டிலேயே வைத்து கண்காணிக்க வுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணாண்டோ 02

கொரோனாத் தொற்றால்

## பருத்தித்துறையைச் சேர்ந்த 48 வயதான பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அரசாங்கத் தக 02

சொந்த வாகனத்தில்

## குடும்பத்தினருடன் பயணித்தால்

முகக் கவசம் தேவையில்லை

(கொழும்பு)
நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்து வருகின்ற நிலையில் குடும்ப உறுப்பினர்களு 02

## காரைநகரில் கூழ் குடித்தவர்கள்

தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் காரைநகரில் திருமண கலப்பு ஒன்றின் பின்னர் கூழ் காய்ச்சிக் குடித்த 02

## சீரற்ற காலநிலையுடன்

# கொரோனா பரவல் மேலும் தீவிரமடையும்

### விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர



*(கொழும்பு)* சீரற்ற காலநிலையுடன் கொரோனா பரவல் அதிகரிக்கக்கூடிய அபாயம் உள்ளது. எனவே வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்படும் நபர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

முடக்கப்பட்ட பகுதிகளுக்கு

## நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)
சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரண பொதிகளை வழங்க அரசாங்கம் 02

## கொடிகாமத்தில் திருமண மண்டப முகாமையாளர்

உட்பட இருவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொடிகாமத்தில் பணியாற்றும் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
கொடிகாமத்தில் 02

கொரோனா

## +2,386

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மேலும் 2,386 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட் 02

வேலைக்குச் செல்வோருக்கு

## அடையாள அட்டை எண் பொறிமுறை பொருந்தாது

(கொழும்பு)
அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை அடிப்படையிலான முறையைப் பின்பற்றி நாளை திங்கட்கிழமை முதல் வீடுகளிலிருந்து வெளியேறத் தவறும் நபர்கள் மீது கடுமை 02

## முகக் கவசம் அணியாதோரை கைது செய்து தூக்கிச் செல்ல வேண்டாம்

### கைது செய்யும் நடைமுறையை நிறுத்துக

பொலிஸ்மா அதிபர் அதிரடி உத்தரவு

04ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதிக்கக் கோரி

### கோப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்த விண்ணப்பம் யாழ்.நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதிக்கக் கோரிகோப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப் 02

## யாழில் 36 பேர் உட்பட வடக்கில் 61 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் 36 பேர் உட்பட வடக்கில் 61 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.
நேற்றைய தினம் 858 பேருக்கு நடத்தப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தில் 36 பேருக்கும் முல்லைத்தீவில் 6 02

## நிவாரணம்...

தீர்மானித்திருக்கின்றது.

பிரதேச செயலகங்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 20 அத்தியாவசியப் பொருட்கள் உள்ளடங்கலாக இந்நிவாரண பொதி வழங்கப்படவுள்ளது.

இந்நிவாரணப் பொதி நாளை திங்கட் கிழமை முதல் மக்களுக்கு வழங்கப்படவுள்ள அதேவேளை அவற்றினை மூன்று தினங்களுக்குள் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையினை அனைத்து மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராமசேவை அதிகாரிகள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் முன்னெடுக்கப்படும் என்றும் வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## கொடிகாமத்தில்...

உள்ள பிரபல திருமண மண்டபத்தின் முகாமையாளர், கொடிகாமம் நகர் பகுதி வியாபார நிலைய பணியாளர் ஆகிய இருவருக்கே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே கொடிகாமத்தின் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பருத்தித்துறை...

வல் திணைக்களத்தின் அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட 48 வயதுடைய பெண் ஒருவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 13ஆம் திகதியன்று உயிரிழந்துள்ளார்.

நிமோனியாவுடன் நாள்பட்ட சிறுநீரக நோய் நிலைமையே மரணத்திற்கான காரணங்களாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனா...

புள்ளே தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அவருக்கு நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் அவர் வைத்தியசாலைக்கு மாற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை முதல் இந்த நடைமுறையை பின்பற்றவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## அடையாள...

யான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சிவில் உடைகள் மற்றும் சீருடை ஆகிய இரண்டிலும் ஏராளமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

தேசிய அடையாள அட்டை இறுதி எண்முறையை பின்பற்றத் தவறியது குறித்து கடந்த வியாழக்கிழமை நபர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

எனினும் நாளை திங்கட்கிழமை முதல் முறைமையை மீறும் நபர்கள் கைது செய்யப்படுவார்கள். இருப்பினும், தினசரி கடமைக்குச் செல்வோருக்கு இந்த முறைமை பொருந்தாது.

மருத்துவமனைகளுக்குச் சென்று அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோரைத் தவிர, எந்தவொரு நபரும் இன்று தங்கள் வீடுகளை விட்டு வெளியேற அனுமதிக்க மாட்டார்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ம-3)

## குடும்பத்தின...

டன் சொந்த வாகனங்களில் வீட்டில் இருந்து வெளியே செல்லும்போது முகக் கவசம் அணியத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்தார்.

குறித்த வாகனம் கார் அல்லது வான் போன்று கண்ணாடியால் மூடப்படக்கூடியவாறு இருக்க வேண்டியது அவசியம் என்று சுட்டிக் காட்டினார். (ம-3)

## முள்ளிவாய்க்...

பத்தை யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் நிராகரித்தார்.

சம்பவம் இடம்பெறப் போவதைத் தடுக்கக் கோரும் ஏ அறிக்கையை தாக்கல் செய்யாது சட்டம் மீறப்பட்டதாக கண்டறியப் பட்டால் பி அறிக்கையில் தாக்கல் செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை கோப்பாய் பொலிஸ் பிரிவில் தடை செய்யக் கோரி பொலிஸாரால் நேற்று ஏ அறிக்கையில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இலங்கை குற்றவியல் சட்டம் 106ஆம் பிரிவு மற்றும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த ஏ அறிக்கையை கோப்பாய் பொலிஸார் முன் வைத்தனர்.

நினைவேந்தல் நிகழ்வுகளால் சட்டம் மீறப்பட்டதாகக் கண்டறியப்பட்டால் பி அறிக்கையின் கீழ் விண்ணப்பம் செய்யுமாறு உத்தரவிட்ட நீதவான், கோப்பாய் பொலிஸாரால் தடை கோரிய ஏ விண்ணப்பத்தை நிராகரித்தார். (ம-3,18,33)

## யாழில் 36...

பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தல் 6 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 11 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் 2 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. (ம-3)

## காரைநகரில்...

ஒன்பது பேர் நேற்று தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

காரைநகரில் ஒரு வீட்டில் பலர் சேர்ந்து கூழ் காய்ச்சிக் குடிப்பதாக சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்கப்பட்டிருக்கின்றது.

சம்பவத்தை அடுத்து அங்கு சென்ற சுகாதார உத்தியோகத்தர்கள் கூழ் காய்ச்சிக் குடித்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேரை அடையாளம் கண்டதுடன் அவர்களை சுயதனிமைப் படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பந்தக்கலப்பு ஒன்றின் பின்னரே தாம் கூழ் காய்ச்சியதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். (ம-3)

## கொரோனா பர...

கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும். அதற்கமைய தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்புடன் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதென்பது இயல்பாகும்.

எனினும் இதனை துரிதமாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறிருக்க கடந்த சில தினங்களாக நாட்டில் மழையுடனான சீரற்ற காலநிலை நிலவுகிறது.

இதன் காரணமாக பாதிக்கப்படும் மக்கள் நலன்புரி முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

எனினும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில்கூட பொதுமக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டும். பெருமளவானோர் ஒரு முகாமில் தங்க வேண்டியேற்படும்போது ஒருவருக்கு தொற்று காணப் பட்டால் கூட அது அங்குள்ள சகலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

எனவே முகாம்களில் தங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது மக்கள் முகக் கவசம் அணிவது கட்டாயம் என்பதோடு, தமது குடும்பத்தாருடன் மாத்திரம் இருக்க வேண்டும். ஏனையோரிடம் தனிநபர் இடைவெளியை பேணுவது அத்தியாவசியமானதாகும் என்றார். (ம-3)

# யாழ்.,பூநகரி பிரதேச செயலக ஊழியர்கள் ஐவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சியின் பூநகரி பிரதேச செயலக ஊழியர்கள் 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் (கச்சேரி) இருவரும் பூநகரி பிரதேச செயலகத்தில் மூவரும் (சமுர்த்தி உத்தியோகத்தர்கள்) தொற்றாளர்களாக அடையாளம் காணப் பட்டுள்ளனர். (ம-3)

### யாழ்.பல்கலை வவுனியா வளாகத்தில்

# மேலும் 6 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினைச் சேர்ந்தவர்கள் ஆறு பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி 31 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அவர்களுடன் நெருக்கமாக பழகியவர்களுக்கு மேற்கொள்ளப் பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் வவுனியா வளாகத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோர் எண்ணிக்கை 66 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

# இலங்கையில் 5 நாட்களில்

## 100க்கும் அதிகமான கோவிட் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் 5 நாட்கள் என்ற குறுகிய காலப்பகுதியில் நூற்றுக்கும் அதிகமான கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த 9ஆம் திகதி நாட்டில் கோவிட்-19 மரணங்களின் எண்ணிக்கை 800ஐ கடந்து 801 ஆக பதிவாகியிருந்தது.

இந்த நிலையில், கடந்த 5 நாட்களில் 120 கோவிட்-19 மரணங்கள் பதிவாகியதுடன், மரணங்களின் மொத்த எண்ணிக்கை 900ஐ கடந்துள்ளது.

10ஆம் திகதி 26 மரணங்களும் 11ஆம் திகதி 23 மரணங்களும் 12ஆம் திகதி 18 மரணங்களும் 13ஆம் திகதி 24 மரணங்களும் நேற்றுமுன்தினம் 31 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இதையடுத்து, இலங்கையில் கோவிட்-19 தொற்றினால் மரணித்தோர் எண்ணிக்கை 921 ஆக அதிகரித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் தரவுகளின்படி, இலங்கையின் கோவிட்-19 மரணங்களின் சதவீதமானது, 0.67 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

# கோவிட்டால் 20 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 20 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரை பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 941 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## +2,386...

டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணி உடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் 140,471 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3)

> நீங்கள் வாழ்வதோடு பிறர் வாழவும் வழிவகை செய்யுங்கள்.
> – சர் ரோஸர்லெஸ்ட் ரேஞ்ச்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்கள் தாமாக உணர்ந்து நடமாட்டத்தை குறைக்க வேண்டும்.

கடந்த 13ஆம் திகதி இரவு 11 மணியளவில் இருந்து நாடு முழுவதிலும் பயணத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றின் வேகம் அதிகரித்துள்ள நிலையில் அவ்வாறானதொரு முடிவை அரசாங்கம் எடுப்பது தவிர்க்க முடியாததாயிற்று.

இங்கு பயணத் தடை என்ற சொற்பதம் பிரயோகிக்கப்பட்டாலும் நாடு முடக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

எனினும் சொற்பதங்கள் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

மாறாக கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான ஒரே வழி பயணத் தடை என்பதாக சுகாதாரத் தரப்புகள் கருகின்றன என்றும், எனவே பயணத் தடையை அமுல்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அரசாங்கம் காரணம் கூறலாம்.

அந்தக் காரணத்தை நியாயமற்றதாகவும் விவாதிக்க முடியாது.

அதற்காக பயணத் தடை என்பது ரமழான் பெருநாள் வழிபாடுகளைத் தடுப்பதற்காகவும் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முடக்குவதற்காகவும் இருக்கக்கூடாது என்பதுதான் நம் கருத்து.

இவை ஒருபுறமிருக்க, பயணத் தடையை தொடர்ச்சியாகப் பின்பற்றும்போது, நாளாந்த கூலித் தொழிலாளர்களும் அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்துவோரும் விவசாயம் மற்றும் கடற்றொழிலில் ஈடுபடுவோரும் மிகப் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும்.

எனவே தொடர்ச்சியாக நாடு முழுமைக்கும் பயணத் தடையை விதிப்பது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால், பயணத் தடை நீக்கப்படக்கூடிய சாத்தியம் உண்டு.

இங்குதான் ஒரு விடயத்தைப் பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது பயணத் தடை நீக்கத்துக்கும் கொரோனாத் தொற்றுக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு உண்டு.

பயணத்தடை நீக்கப்படும்போது, மக்களின் நடமாட்டம் அதிகரித்து கொரோனாத் தொற்று வேகமும் அதிகரிக்கும்.

எனவே பயணத் தடை விதிக்கப்பட்டாலும் தேவையற்ற நடமாட்டங்களைப் பொதுமக்கள் தவிர்ப்பதன் மூலம் கொரோனாத் தொற்றில் இருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதைவிடுத்து கொரோனாத் தொற்றுக் குறித்து எந்த அச்சமுமின்றி மக்கள் நடமாடுவார்களாயின், மீண்டும் பயணத் தடையும் அதனூடு பொருளாதாரப் பஞ்சமும் ஏற்படும்.

ஆகையால் இவை தொடர்பில் பொதுமக்கள் தாமாக உணர்ந்து தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது அனைத்துக்கும் நன்மையாக அமையும்.

# 600 படுக்கைகளுடன் நாவற்குழியில் கொரோனா சிகிச்சை நிலையம் தயார்

## யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் நாவற்குழியில் 600 படுக்கைகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை நிலையம் தயார்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில் யாழ். மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகள் மற்றும் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியன ஏற்கனவே கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் தையிட்டி பகுதியில் இடம்பெற்ற திருமண வீட்டில் 20க்கும் மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் திருமண வீடுகள் மற்றும் ஏனைய ஒன்று கூடல்களை முற்றாக நிறுத்துவது கொரோனா சூழலில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அமையும். யாழ். மாவட்டத்தில்பெற்றோல், எரிவாயு, ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கான எவ்வித தட்டுப்பாடுகளும் ஏற்படாத வண்ணம் அதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே பொது மக்கள் தமது பாதுகாப்பையும் சமூகத்தின் பாதுகாப்பையும் கருதி தேவையற்ற நடமாட்டங்களை தவிர்த்துக் கொள்வது ஒவ்வொருவரின் கடமை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18,33)

## மன்னாரில் கடும் காற்று மீனவர்களின் வாடிகளுக்குள் புகுந்தது கடல் நீர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவி வந்த நிலையில் நேற்றைய தினம் சனிக்கிழமை கடும் காற்றுடன் மழை பொழிந்தது.

கடும் காற்று காரணமாக கடல் சீற்றம் அதிகரித்து வருவதுடன் மீனவர்களின் தற்காலிக வாடிகளுக்குள்ளும் கடல் நீர் புகுந்துள்ளது. தொடர்ந்து காற்றின் வேகம் அதிகரித்து வருவதனால் கடல் சீற்றம் அதிகரிப்பதுடன் கடல் நீர் மக்கள் குடியுருப்பு பகுதிகளுக்குள் புகுவதற்கான நிலைமையும் காணப்படுகின்றது.

அதே நேரம் கடற்கரையோரங்களில் நிறுத்தப்பட்ட படகுகளை மீனவர்கள் உயரமான இடங்களுக்கு எடுத்துச் செல்வதுடன் கடற்கரை ஓரங்களில் வைக்கப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வலைகளையும் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. (ம-3,285)

## மாந்தை நட்டாங்கண்டலில் சிவிலில் சென்ற பொலிஸாருக்கு மதுபானம் விற்றவர் கைது


(யாழ்ப்பாணம்)

பிறப்பிக்கப்படாத ஊரடங்கு தொடர்ச்சியாகவும் நேற்று இரண்டாவது நாளாக நாடுமுழுவதும் அமுல்படுத்தப்பட்டிருக்கும் வேளையில்,மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பகுதியில் சிவில் உடையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு மதுபானங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நட்டாங்கண்டல் பொலிஸ் உத்தியோகத்தருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி பொலிஸ் சார்ஜன்ட் செனவிரத்ன தலைமையில் குறித்த இடத்திற்கு சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கு மதுபானங்களை விற்கும் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,315)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖“ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில், விண்ணரசுஅவர்களுக்கு உரியது.
❖துயருறுவோர் பேறுபெற்றோர்
ஏனெனில், அவர்கள் ஆறுதல் பெறுவர்.
❖கனிவுடையோர் பேறுபெற்றோர்
ஏனெனில், அவர்கள்நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.
❖நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்
ஏனெனில், அவர்கள் நிறைவுபெறுவர்.
❖இரக்கமுடையோர் பேறுபெற்றோர்
ஏனெனில், அவர்கள் இரக்கம் பெறுவர்.
❖தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்.
❖அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்
ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.
❖நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்
ஏனெனில், விண்ணரசு அவர்களுக்குரியது.

(தொடரும்)

■ கட்டில்கள் நிரம்பி விட்டன

■ சுகாதாரப் பணியாளர்கள் திணறுகின்றனர்

# தற்போதைய நிலைமையின் பாரதூரத்தினை உணர்ந்து செயற்படுங்கள்

## பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையை அச்சுறுத்தும் கொரோனா அபாய நிலை விலகாத நிலையில் பொதுமக்கள் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாதுவிடில் இந்தியாவின் நிலை இங்கும் ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

நாடுமுழுவதும் முடக்கல் நிலை காணப்படும் காலப்பகுதியில் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் பொதுச்சுகாதார அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவி வரும் கொரோனா நெருக்கடி நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்காக போராடும் அனைத்து தரப்பினருக்கும் பொதுமக்கள் தங்கள் ஆதரவை வழங்கவேண்டுமென பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் பொதுசெயலாளர் பாலசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் அறிவித்துள்ள போக்குவரத்து கட்டுப்பாடுகளை பொதுமக்கள்பின்பற்றவேண்டும்.

அரசாங்கம் நிலைமையின் பாரதூர தன்மையை உணர்ந்து கொள்வது முக்கியமானதென தெரிவித்துள்ள அவர் மருத்துவமனைகள் சவாலான நிலையை எதிர்கொள்கின்றன, மருத்துவனை கட்டில்கள் நிரப்பிவிட்டன, சுகாதார பணியாளர்கள் திணறுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளின் போது தவறான விதத்தில் நடந்துகொள்வதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் எனவும் பொதுச்சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி வழங்கப்படும் நிலையங்களுக்கு குடும்பத்தவர்கள் உறவினர்களை அழைத்து வருவதை தவிர்க்க வேண்டும்

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றாவிட்டால் இந்தியா போன்றதொரு நிலைமை உருவாகுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# பொருளாதார வீழ்ச்சியை ஈடு செய்யலாம் உயிரிழப்புகளை ஈடு செய்ய முடியாது

## ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு)

கொழும்பிலுள்ள உலக சுகாதார ஸ்தாபன அலுவலகம் மற்றும் இலங்கையிலுள்ள மருத்துவத்துறை நிபுணர்கள் முன்னெடுத்த கலந்துரையாடலின் அறிக்கைக்கு அமைய எதிர்வரும் சில வாரங்களில் கொவிட் வைரஸ் இலங்கையில் மிக வேகமாக பரவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை கட்டுப்படுத்துவதற்கு நாட்டை முடக்க வேண்டும் என்று சுகாதார தரப்புக்கள் பரிந்துரைத்தால் அதனை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டால் அதனை மீள கட்டியெழுப்ப முடியும். ஆனால் மக்களின் உயிருக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதனை ஈடுசெய்ய முடியாது. எனவே கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவற்கு நாட்டை முடக்குவதைத் தவிர மாற்று தீர்வு இருப்பதாக தோன்றவில்லையெனவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காணொளியூடாக விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்த அவர் அதில் மேலும் கூறுகையில் ,

கொவிட் தொற்று இலங்கையிலும் , இந்தியா மற்றும் நேபாளம் உள்ளிட்ட நாடுகளிலும் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது.

இதேபோன்று இந்தியாவில் கறுப்பு பங்கசு (Black Fung us) என்ற பிரிதொரு நோயும் பரவ ஆரம்பித்துள்ளது. நாம் இதிலிருந்தும் பாதுகாப்படைய வேண்டும்.

இலங்கையில் தடுப்பூசி தட்டுப்பாடு நிலவுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருடத்திலேயே சகலருக்கும் தடுப்பூசி வழங்கக் கூடியதாக இருக்கும். அதுவரையில் நாம் அனைவரும் வைரஸ் தொற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கு வேறு மாற்று வழிகள் உள்ளதா என்று என்னால் கூற முடியாது. வைரஸ் பரவல் மேலும் தீவிரமடைந்தால் மந்த நிலையிலுள்ள பொருளாதாரத்திற்கு மேலும் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும். எனவே தொற்று பரவுவதைத் தடுப்பதற்கான தேவை அவசியமாகிறது. இதன் ஊடாகவே பொருளாதார பாதிப்பை குறைத்துக் கொள்ள முடியும்.

எனவே மக்களின் உயிரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம். பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை எம்மால் மீள சீரமைத்துக் கொள்ள முடியும்.

ஆனால் உயிருக்கு ஏற்படும் பாதிப்புக்களை எம்மால் ஒரு போதும் ஈடு செய்ய முடியாது. உயிரை பாதுகாப்பதே அரசாங்கத்தின் கடமையாகும். இதன் அடிப்படையில் நாமனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று ரணில் தெரிவித்தால் (நி-04)

# மேல்மாகாணத்திற்கு வெளியிலும் தடுப்பூசி

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை மேல் மாகாணத்துக்கு வெளியிலும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேல் மாகாண மக்களுக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன எனவும், இதனைத் தொடர்ந்து கண்டி, குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இதன்படி குறித்த மாவட்டங்களில் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகமாக உள்ள தெரிவு செய்யப்பட்ட சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் தடுப்பூசிகளைச் செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

# கைது செய்வோரை ஒரே வாகனத்தில் ஏற்ற வேண்டாம்

## பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(கொழும்பு)

முகக்கவசம் அணியாதவர்களை பொலிஸார் தூக்கிக் கொண்டு செல்வதை இனியும் தொடரக்கூடாது என பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்ன அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் சிறப்பு சுற்றறிக்கை மூலம் தகவல் அளித்துள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு நபர்களை தூக்கிச் செல்லும் போது பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் இருந்தால் அவர் மூலம் அதிகாரிகள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதால் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட நபர்களை ஒரே வாகனத்தில் ஒன்று சேர்ப்பதன் மூலம் மற்றொரு குழுவும் இதில் பாதிக்கப்படவாய்ப்புள்ளது என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இனி மேல், முகக்கவசம் இல்லாத நபர்களை தூக்கிச் செல்லக் கூடாது என்றும் கைது செய்யப்பட்டவர்களை ஒரே வாகனத்தில் ஏற்றக்கூடாது என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (நி-4)

# 24 மணி நேரத்தில் 253 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 253 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அதற்மைய இதுவரையான காலப்பகுதியினுள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 9,282 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# விசேட பூசை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும்வாழும்மக்களும்கொரோனாவைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசிவேண்டி விசேட பூசை வழிபாமுகள் இடம்பெறுவருகின்றன அந்தவகையில் நாளை 17 அம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் கோவிலில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. விசேடபூசை வழிபாடுகளின்நிறைவில்கோவிலின் பிரதமகுருக்கள் சிவ ஸ்ரீநா. கிருபாகரக் குருக் களின் அருளாசி உரையும் வேதபாராணமும் இடம்பெறவுள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம் " நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (5,4)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முல்லை நீதிமன்றம் தடை உத்தரவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின்முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மாங்குளம், ஒட்டுசுட்டான், மல்லாவி, ஐயன்கன்குளம், முள்ளியவளை ஆகிய ஏழுபொலிஸ்நிலையங்களால் கோரப்பட்ட 27 முக்கிய பிரமுகர்களுக்குமுள்ளி வாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வுக்கு முல்லைத்தீவு நீதிமன்று தடையுத்தரவுவழங்கியுள்ளது

இதேவேளை முள்ளியவளை பொலிஸார் பெயர்குறிப்பிடாமல் தமது பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு செய்யதடையுத்தரவு பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8,4,281)

# அனுமதிப் பத்திரமின்றி கடலட்டை பிடித்தவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கடற்பரப்புக்குள் சட்டத்துக்குப் புறம்பாக கடலட்டை பிடித்த 11 மீனவர்கள் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுது . மன்னாரைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கடலட்டை தொழில் இடம்பெறுவதாக கடற்தொழில் நீரியல் வளத்தி ணைக்கள அதிகாரிகளுக்கு க்கிடை டத்ததகவலின் அடிப்படையில்மு ன்னெடுக்கப்பட்டவிசாரணையில் தொழிலில்ஈ டுபட்டவர்களிடம் அனுமதிப் பத்திர ம்இருக்கவில்லை. அதனால்சட்டத்துக்குப்புறம்பாக கடலட்டைபிடித்தனர் என்ற என்ற குற்றச்சாட்டில் 11 மீன வர்களும்கை துசெய்யப்பட்டனர். அவர்கள் தொழிலுக்குப் பயன்படுத்திய 4 படகுகளும் கைப்பற்றப்பட்டன. மீனவர்கள் 11 பேரையும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5,4,33)

# யானை தாக்கியதில் இளைஞர் காயம்

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பருப்புக் கடந்தான் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை 4.30 மணியளவில் காட்டு யானை தாக்கிய நிலையில் சிறு காயங்களுடன் இளைஞர் ஒருவர் அதிஸ்ட வசமாக உயிர் தப்பியுள்ளார். மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர்ஒருவரே காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளார். காட்டு யானை தாக்கிய போது குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் இருந்து பாய்ந்துள் ளார். இதன் போது மோட்டார் சைக்கிளை யானை சேதப்படுத்தியுள்ளது. அயலவர்களின் உதவியுடன் குறித்த இளைஞர் மீட்கப்பட்டு பள்ளமடு வைத்தியசா லையில்அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8,4,285)

## பயணத்தடை அமுலில் இருந்தவேளை
# போதைப் பொருளுடன் பயணித்தவர் கைது

(சாவகச்சேரி)

நாடு முழுவதும் பயணத் தடை அமுலிலுள்ள வேளையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தென்மராட்சி-கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் ஹெரோயின் போதைப்பொருள் சிறிய 12 பொட்டலங்களுடன் சென்ற போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார் . குறித்த இளைஞன் முகக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்ற போது அவ் வழியே மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவத்தினர் அவரை மறித்து சோதனை செய்த போது போதைப்பொருள் வைத்திருந்தது தெரியவந்தது கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் கைது செய்யப்பட்டவரை இராணுவத்தினர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (5,4,30)

## சுகாதார நடைமுறைகளை
# மீறியவர்கள் மீது
## பொலிஸார் அதிரடி நடவடிக்கை



(குருமணகாடு)

வவுனியா பட்டானிச்சூர் கிராமத்தில் பொலிஸார் மற்றும் சுகாதார பரிசோதகர்களால் கண்காணிப்பு நடவடிக்கை நேற்று (15.05) மேற்கொள்ளப்பட்டதுடன், பலருக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டது. கிராமத்தில் முகக்கவசமின்றி பொது இடத்தில் விளையாட்டில் ஈடுபடல், மக்கள் ஒன்றுகூடி இருந்தமை, வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தமை என பல்வேறு செயற்பாடுகளில் அரச பயணத் தடை உத்தரவு மற்றும் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன வாகன ஆசனத்திற்கு மேலதிகமாக மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டியில் பயணம் செய்தவர்களும் வழிமறிக்கப்பட்டு கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர். (8,4,250)

# கொரோனா வகையை அறிய மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

(நுல்லூர்)

சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தமிழகத்திலிருந்து வந்திருந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் அவர்களது மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடந்த 11ஆம் திகதி தமிழகத்திலிருந்து சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக மன்னாரை வந்தடைந்த ஒருவர் அங்கிருந்து பேருந்து மூலம்யாழ். சுழிபுரம் பகுதிக்கு வந்துள்ளார் இந் நிலையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு காரைநகர் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அதே வேளை கடந்த12 ஆம் திகதி தமிழகத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக யாழ். குருநகர் பகுதிக்கு வந்து பதுங்கியிருந்த வயோதிப பெண் ஒருவருத் அவரது மகள் மற்றும் அவரது இரண்டு பேரப்பிள்ளைகள் என நான்கு பேர் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதில் ஒரு குழந்தைக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இந்நிலையில் இந்தியாவில் தற்போது பரவி வரும் உருமாறிய கொரோனா தொற்றா என்பதைக் கண்டறிய அவர்களது மாதிரிகள் கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தன பல்கலைக்கழக ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (5,4,33)

# திடீரென தீப்பிடித்து எரிந்த ஆட்டோ



மன்னார் உப்புக்குளம் புதிய தெரு பகுதி ஊடாக பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று நேற்று காலை திடீர் என தீப்பிடித்து எரிந்துள்ளது.-எனினும் குறித்த முச்சக்கர வண்டியை செலுத்திச் சென்றவர் குறித்த முச்சக்கர வண்டியில் இருந்துபாய்ந்து எவ்வித பாதிப்பும் இன்றிதப்பியுள்ளனர்.-எனினும் குறித்த முச்சக்கர வண்டி முழுமையாக தீ பிடித்து எரிந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (8,4,285)

# இராசிபலன்

**16.05.2021**
**வைகாசி 02, ஞாயிற்றுக்கிழமை**
**சதுர்த்தி முற்பகல் 7.45 மணிவரை**
**திருவாதிரை முற்பகல் 9.05 மணிவரை**
**சுபநேரம் 8.53 - 10.23 மணிவரை**
**இராகுகாலம் 4.23 - 5.53 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- மூலம்**

**வளவன்**

**மேஷம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம். போசன சுகமுண்டு. ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள். தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்

**ரிஷபம்** — அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள். கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம். புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** — எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல வழியாக அமையலாம். போசன சுகமுண்டு. ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**கடகம்** — அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனை பிரார்த்திப்பீர்கள். மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும். சயனசுகக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** — திறமைகள் வெளிப்படும் நாள். அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள். நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள். போசன சுகமுண்டு.

**துலாம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும். விடாமுயற்சிக்கு முன்னேற்றம் கிடைக்கும். சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம். எதையும் யோசித்து செய்வதன் மூலம் வெற்றி பெறலாம். வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**தனுசு** — அசமந்தமான நாள். குடும்பத்தினரிடையே அந்நியோண்ணியம் அதிகரிக்கலாம். எதிர் பார்த்த தகவல்கள் வந்து சேரலாம். எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** — தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு. உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும். நாவண்மையால் நல்ல பெயர் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும்.

**கும்பம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமை யடைவீர்கள். பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும். தாழ்ந்த சுபாபமுண்டு. பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.

(C-9283)

**மீனம்** — பேச்சில் கனிவு பிறக்கும். உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு. மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**தோற்கும் நேரம் வீரர்கள் உண்டாக்கபடுகின்றார்கள்.**

# செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கிய சீன விண்கலம்



(பெய்ஜிங்)

உலக அளவில் பல்வேறு துறைகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் வல்லரசு நாடுகள், விண்வெளியிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்ட நீண்ட காலமாகவே முயற்சித்து வருகின்றன.

அந்த வகையில் செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக, கடந்த ஆண்டு ஜூலை மாதம் சீனா அனுப்பிய தியான் வென்-1விண்கலமானது, கடந்த பெப்ரவரி மாதம் செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப்பாதைக்குள் நுழைந்தது. 6 சக்கரங்களைக் கொண்ட 'ரோவர்' கருவியுடன் அனுப்பப்பட்ட இந்த விண்கலத்தின் மொத்த எடை 240 கிலோ ஆகும்.

இந்த நிலையில் தற்போது செவ்வாய்கிரகத்தில் இந்த தியான்வென்-1 ரோவர் விண்கலம் வெற்றிகரமாக தரை இறங்கி உள்ளதாக சீனா அறிவித்துள்ளது. செவ்வாய்கிரகத்தின் மேல், கீழ் பகுதிகளின் புவியியல் அமைப்பு குறித்து இந்த விண்கலம் ஆய்வு செய்ய உள்ளது. இந்நிலையில் தற்போது சீன விண்கலம் ஒன்று செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியிருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாக கருதப்படுகிறது.

(நி-4,8)

# ஏழை நாடுகளுக்கு தடுப்பூசியை வழங்குமாறு உலக சுகாதார அமைப்பு வலியுறுத்தல்

**(ஜெனிவா)**

**சிறுவர்களுக்குத் தடுப்பூசிபோடும் திட்டங்களை பணக்கார நாடுகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதேநேரத்தில் ஏழை நாடுகளுக்கு தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் வலியுறுத்தியுள்ளார்.**

தொற்றுநோயின் இரண்டாவது ஆண்டு மிகவும் ஆபத்தானது எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஏழை நாடுகள் இதுவரை அதன் சுகாதார பணியாளர்கள் மற்றும் மிகவும் பாதிக்கப்படக் கூடிய தரப்பினருக்குக் கூட தடுப்பூசி போடவில்லை. இந்நிலையில் பணக்கார நாடுகள் சிறுவர்களுக்கும், இளம் வயதினருக்கும் தடுப்பூசி போட திட்டமிட்டு வருவது மோசமான சுயநலவாத செயற்பாடு எனவும் அவர் கண்டனம் வெளியிட்டார்.

கோவக்ஸ் சர்வதேச பொதுத் தடுப்பூசித் திட்டத்துக்கு உலக நாடுகள் தங்கள் தடுப்பூசிகளை வழங்க வேண்டும். இதன் மூலம் அனைத்து நாடுகளிலும் மிகவும் பாதிக்கப்படக் கூடிய தரப்பினரின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கனடாவும் அமெரிக்காவும் இளம் பருவத்தினருக்கு போடுவதற்கான தடுப்பூசிகளை சமீபத்திய வாரங்களில் அங்கீகரித்துள்ளன. இந்நிலையில் அந்தத் திட்டத்தை ஒத்திவைத்து தடுப்பூசிகளை ஏழை நாடுகளுடன் தடுப்பூசிகளை பகிருமாறு அமெரிக்காவுடன் உலக சுகாதார அமைப்பு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது என உலக சுகாதார அமைப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் வெறும் 0.3% அளவு தடுப்பூசிகள் மட்டுமே போடப்பட்டுள்ளன.

இவ்வாறான தடுப்பூசி பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிகளவு இறப்புக்களை உலகம் சந்திக்க நேரிடும் எனவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்தார்.

(நி-4,8)





**நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் தந்தையின் இறுதி நிகழ்வின் நிழல்கள்...**

# சர்வதேச நீதிமன்றில் இலங்கையை நிறுத்த ஏனைய நாடுகள் ஆதரவு வழங்க வேண்டும்

## அவுஸ்திரேலிய பாராளுமன்றில் வலியுறுத்து

(கன்பெரா)

**இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதுடன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு ஏனைய நாடுகள் ஆதரவு வழங்கவேண்டும் என்று அவுஸ்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றத்தின் கீழ்சபையில் கடந்த வியாழக்கிழமை தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்து உறுப்பினர் ஹக் மெக்டெமொற் உரையொன்றை நிகழ்த்தினார்.

இதன்போது இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதற்கான தலைமையை அவுஸ்திரேலியா வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் அவர், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்நிறுத்துவதற்கு ஏனைய நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரியிருக்கிறார். (நி-4)

# 256, 000 பேருக்கு கொவிட் தடுப்பூசி

(கொழும்பு)

ஒக்ஸ்போர்ட் / அஸ்ட்ரா ஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டும் 11,385 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கையில் 256,004 பேருக்கு கோவிஷீல்ட் தடுப்பூசி முழுவதுமாக போடப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று 61, 882 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்ட நிலையில் குறித்த தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் எண்ணிக்கை 276,762 ஆக காணப்படுகின்றது.

இதற்கிடையில் 14,673 பேருக்கு ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

# மொத்த விற்பனையாளர்கள் கொழும்பு செல்ல அனுமதி

(கொழும்பு)

கொழும்பு, புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு, நாடளாவிய ரீதியிலுள்ள மொத்த விற்பனையாளர்களுக்கு இன்று முதல் அனு மதி வழங்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்துக்கு கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, அவர் மேலும் கூறுகையில், பிரதேச செயலகங்களில் இதற்கான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொண்டு, மொத்த விற்பனை நோக்கில் பொருட்களை கொள்வனவு செய்யவதற்காக மாத்திரம் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்துக்கு வரமுடியும் என தெரிவித்தார். (நி-04)

# கைதிகள் தொடர்பில் அறிய தொலைபேசி எண் அறிமுகம்

(கொழும்பு)

கொவிட் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வரும் கைதிகளின் விபரங்களை அறிந்து கொள்வதற்காக தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, சிறைச்சாலையில் கொவிட் தகவல் கேந்திர நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, கைதிகளின் குடும்பத்தினர் 011- 4677101 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# மீகொட பொருளாதார நிலையத்தில் பயணத்தடையை மீறி குவிந்த மக்கள்

(கொழும்பு)

பொருளாதார மத்திய நிலையங்களை திறந்து வைக்குமாறு அரசாங்கம் அறிவிப்பு விடுத்திருந்த நிலையில், இரவு நேர மீகொட பொருளாதார மத்திய நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

எனினும், மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்காக பொது மக்கள் வராத காரணத்தால் சுமார் 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்கறிகளை இலவசமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகள் இலவசமாக வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதை அறிந்த பொது மக்கள் பயணத் தடையையும் மீறி ஆயிரத்திற்கும் அதிகமானோர் நீண்ட வரிசையில் நின்று மரக்கறியை பெற்றுச் செல்ல வந்திருந்தனர்.

அதனால் மீளவும் கடைகள் மூடப்பட்டன. (நி-4)

# தடுப்பூசி செலுத்தாவிடின் தொடருந்து இயங்காது

(கொழும்பு)

தொடருந்து சேவையில் நேரடியாக தொடர்புபடும் சேவையாளர்களுக்கு உடனடியாக கொவிட் தடுப்பூசியை செலுத்த நடவடிக்கை எடுக்காவிடின், நாளை திங்கட்கிழமை முதல் தொடருந்து சேவையை முன்னெடுக்கப்போவதில்லை என தொடருந்து கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால் தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் திங்கட்கிழமை முதல் தொடருந்து சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எனினும், தமது சங்கத்தினருக்கு தடுப்பூசி செலுத்தப்படாவிடின், பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் பின்னர் தொடருந்து சேவைகளை தாம் முன்னெடுக்கப் போவதில்லை என தொடருந்து கட்டுப்பாட்டாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-4)

# தாழமுக்கம் வலுவடைந்துள்ளதால் காற்றின் வேகம் அதிகரிக்கும்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரபிக்கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக வலுவடைந்துள்ளது.

இந்த தாழமுக்கம்நாளை மறுதினம் 18 ஆம் திகதி குஜராத், மற்றும் பாகிஸ்தான் கரையோரத்தை கடக்கக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை தொடக்கம் மன்னார் ஊடாக கொழும்பு வரையிலான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 60 தொடக்கம் 70 கிலோமீட்டர் வரை அதிகரிக்கக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

# சீரற்ற காலநிலையால் 2, 750 குடும்பங்கள் பாதிப்பு



(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் 7 மாவட்டங்களை சேர்ந்த 2,750 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

2,750 குடும்பங்களை சேர்ந்த 11,542 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையால் களுத்துறை, குருநாகல், மற்றும் காலி மாவட்டங்களிலும் மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி-4)

### சீரற்ற காலநிலையால்

# 150,000 பாவனையாளர்களுக்கு மின் விநியோகம் தடை

(கொழும்பு)

சுமார் 1,50,000 பாவனையாளர்களுக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

மலையுடனான காலநிலை ஏற்பட்ட சில அனர்த்தங்களினால் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினமும் சில பகுதிகளில் மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன், வெள்ளம் ஏற்பட்டுள்ளமையினால் இந்த சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், மின்சார விநியோகத்தை வழமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன கூறினார். (நி-4)

# வடமராட்சியில் பிறந்தநாள் கொண்டாடிய 15 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்


## நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்களை பார்வையிட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்

(கரணவாய்)

வடமராட்சி அத்தாய் பகுதியில் பிறந்த நாள் நிகழ்வு கொண்டாடிய சுமார் 15 பேர் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் வடமராட்சி அத்தாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கோவிட் கட்டுப்பாடுகளை மீறி பிறந்த நாள் நிகழ்வு நடைபெறுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதனை ஊர்ஜிதப்படுத்த கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நெல்லியடி பொலிஸார் குறித்த இடத்திற்குச் சென்றுள்ளனர். அங்கு பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டோர் தப்பி சென்ற நிலையில் அங்கு எடுக்கப்பட்ட படங்களை பார்வையிட்டு அதனடிப்படையில் சுமார் 15 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-03,60)

# சோமாஸ்கந்தராஜா குருக்கள் காலமானார்



(யாழ்ப்பாணம்)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் ( கண்ணன் ஐயா ) நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 58 ஆகும்.

நெஞ்சுவலி ஏற்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (ம-03)

# பொன்னாலையில் கைவிடப்பட்ட நிலையில் ரப் மற்றும் கைபேசிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட இரண்டு ரப் மற்றும் நான்கு கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் இளைஞர்கள் சிலரால் மேற்படி பொருட்கள் மீட்கப்பட்டன.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதியில், பொன்னாலை தெற்கு மங்களேஸ்வரன் வீதிக்கு திரும்பும் இடத்தில், பொலித்தீன் பை ஒன்றிற்குள் வைத்து கட்டப்பட்ட நிலையில் இவை காணப்பட்டன.



ரப் மற்றும் தொலைபேசிகள் பயன்படுத்தக்கூடியவாறு நல்ல நிலையில் காணப்பட்டன. நேற்று பிற்பகல் 3 மணிக்கு பின்னர் இந்த இடத்தில் இவை போடப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் அவற்றைப் பெற்றுச் சென்றனர்.

இவை யாருடையவை? யார் கொண்டுவந்து வைத்தார்கள் என்பது தொடர்பாக பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-3,33,104)

# பாடசாலை கல்வியை முடித்த மாணவர்களுக்கு

## உயர்தர கற்கைகளுக்கு வசதி கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ்

(கொழும்பு)

புதிய மறுசீரமைப்பின் ஊடாக எட்டு மாதங்களுக்கு முன்னர் பாடசாலை கல்வியை முடித்துக் கொண்ட பிள்ளைகளுக்கு உயர்தர கற்கை நெறிகளுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பாக கலந்தாலோசிக்கப்படுகின்றது. பல்வேறு நாடுகளில் 21 வயதை அடையும் போது, பிள்ளைகள் பட்டப்படிப்பை முடித்துக் கொள்கின்றார்கள். இலங்கை மாணவர்களுக்கும் இவ்வாறான வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

பத்தாம், 11ஆம் தர வகுப்பிற்காக இதுவரை இருந்த காலவரையறை ஒன்றரை வருடமாக குறைக்கப்படவுள்ளது. இறுதி இரண்டு வருடங்களுக்குள் இதன் பலன்களை மாணவர்களுக்கு வழங்குவது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-03)

## கொழும்பு புறநகர் பகுதியில்

# தடுப்பூசி பெறவந்தவர்களை திருப்பி அனுப்பியதால் பதற்றம்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளை பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசி மையத்தில் நேற்று காலை தடுப்பூசி பெறவந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டது.

கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளை பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு நேற்று முன்தினம் வத்தளை - ஹெந்தல வீதியில் அமைந்துள்ள கெரவலபிட்டி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டது. தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்றைய தினமும் தொடரும் என பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகளால் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக பலர் நேற்று அந்த இடத்திற்கு வந்து அதிகாலை முதல் வரிசையில் காத்திருந்தனர். எனினும், சுகாதார அதிகாரிகளும் பொலிஸாரும் காலை 9 மணியளவில் அந்த இடத்திற்கு வந்து தடுப்பூசி வழங்கும் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இது தொடர்பிலான அறிவித்தல் பலகை வெளியில் வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர். எனினும் அத்தகைய அறிவித்தல் எதுவும் காணப்படவில்லை என பொதுமக்கள் கூறினர். இதனால் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொது மக்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட நாட்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே தடுப்பூசி வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், தடுப்பூசி வழங்கப்படும் நாட்கள் குறித்து தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை என, தடுப்பூசி பெறவந்த பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர். சில தாதியர்கள் சம்பவம் தொடர்பில் பொதுமக்களிடம் மன்னிப்பு கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2021 இல் வெளியிடப்பட்டது.